
வெளியீடு எண் 53.

திருக்கற்குடிக் கோயில் வரலாறு



திருக்கற்குடி மாமலைத் தோற்றம்

தருமபுர ஆதீனம்.

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கற்குடிக் கோயில் வரலாறு

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகளின் திருவுள்ளத்தின்படி

அச்சிடப்பெற்றது.

1943

[redacted]

விலை ரூ. 0—2—0

பொருளடக்கம்



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

24-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

திருக்கற்குடிக் கோயில் வரலாறு

செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மதயானை யுரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னிநின்ற
ஐயா எம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே.

1. தலமும் இருப்பிடமும்

உலகத்திலுள்ள உயிர்களை உய்யக்கொண்டு, ஆட்கொள்ளும்பொருட்டு, எல்லாவற்றையுங் கடந்த பரம்பொருளாகிய இறைவர் ஆங்காங்குள்ள பல கோயில்களில் எழுந்தருளியிருந்து அருள்செய்து வருகின்றார். "மிகுஞ்சுரபிக்கெங்கும் உருக்காண வொண்ணாத பால் முலைப்பால்விம்மி ஒழுகுவது போல் வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கு" என்னும் சிவஞானசித்தித் திருவாக்கின்படி, பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவதுபோல, ஆன்றோர்கள் அமைத்துள்ள ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே அருள்பெறவேண்டும் என்று அறிஞர் கூறுவர். தமிழ் நாட்டில் அத்தகைய சிவத்தலங்கள் 274 உள்ளன. அவைகளுள்

என்றும் பொன்ருத புனல்வளமுடைய பொன்னி என்னும் காவிரி நதி பாயும் சோழ நாட்டில், காவிரிக்குத் தென்கரையில் தென்கயிலாயமெனப் படும் திரிசிராமலேக்கு மேற்கே திருக்கற்குடி என்னும் ஓர் சிறந்த தலம் உளது. இது திருச்சிக் கோட்டையிலிருந்து மேற்கே புத்தூர் வழியாக மூன்று கல் துலேவிலும், திருச்சி ஜங்ஷனிலிருந்து வடமேற்கே ஒன்றரைக் கல் துலேவிலும் உள்ளது.


இத்தலத்திற்கு உய்யக்கொண்டான்மலே, உய்யக்கொண்டீஸ்வரம், என்னும் பெயர்களும், பழய கல்வெட்டுக்களால் நந்திவர்மமங்கலம், ராஜாஸ்ரய சதுர்வேதிமங்கலம் என்னும் பெயர்களும் வழங்கப் படுகின்றன. ஆனல் தற்காலத்தில் **உய்யக் கொண்டான் (திருமலே)** என்றே பொதுவாகச் சொல்லப்படுகிறது. இறைவன் கல்லில் அதாவது மலேயில் குடியிருப்பதாலும், இத்தலத்துப் பாறைக் கற்கள் நெடுநாளாய்க் களவுபோய்க்கொண்டிருக் கவே பெருமான் கல்லின் சாரத்தைக் குடித்து விட்டதாலும் **திருக்கற்குடி** என்றும், உயிர்களே உய்யக்கொள்வதற்கு எழுந்தருளினமையால் **உய்யக்கொண்டான்திருமலே** யென்றும், பல்லவ அரசஞன நந்திவர்ம பல்லவனல் அமைக்கப்பெற்றதால் **நந்திவர்மமங்கலம்** என்றும், முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் **ராஜாஸ்ரயசதுர்வேதி மங்கலம்** என்றும் பெயர்கள் வழங்கலாயின. கல்வெட்டுச் செய்திகளிலிருந்து இந்தப் பிரதேசம் பாண்டி

குலாசனி வளநாடென்றும், தென்கரை கேரளாந்தக வளநாடென்றும், ராஜமகேந்திர வளநாடென்றும், ராஜகம்பீர வளநாடென்றும் வெவ்வேறு காலங்களில் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இத்தலத்திற்குக் கிழக்கே புத்தூரும் தெற்கே சுமார் ஒரு கல்லில் குழுமிஆயி அம்மன் கோயிலும், மேற்கில் நாச்சிக்குறிச்சி, மல்லியம்பத்து முதலிய கிராமங்களும், வடக்கில் பாண்டமங்கலமும் உள்ளன. இத்தலத்துக்கு மேற்கே சுமார் 4 கல் துலேவில் சாமிநாதனுயிருந்து சிவபெருமானுக்கு உபதேசித்ததும், அருணகிரிநாதருக்கு அருள்புரிந்ததுமாகிய பெருமைகளேக் கொண்ட ஆதி வயலூர் என்னும் சுப்பிரமனியத் தலம் உள்ளது.

2. கோயில் அமைப்பு

இக்கோயில் சுமார் 30 அடி உயரமுள்ள பாறையில் அழகாகக் கட்டப்பெற்றுள்ளது. கோயிலே அடுத்து வட்டமான மதிலும், வெளியே சதுரமான பெரிய மதிலும் உள. இந்த வெளி மதில் 6 அடி கனத்தில் கருங்கல்லால் கட்டப்பட்டு மேலே முன்புறத்தில் 1 அடி அகலத்தில் கைப்பிடிச் சுவர் வைக்கப்பட்டுள்ளது. இதன் உட்புறத்தில் நடந்து செல்லலாம். இதன் விஸ்தீரணம் கிழமேலில் 300 அடியும், தென்வடலில் 600 அடியும் உள்ளது. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. இரண்டு அம்மன் சந்நிதிகள் உள்ளன.

கோயிலில், சுவாமி, அம்மன் பிரகாரங்களைச் சேர்த்து திருவீதி உள்பட 5 பிராகாரங்கள் உண்டு. இக்கோயிலுக்கு 3 வாயில்கள் உள்ளன. இரண்டு தெற்கு நோக்கியும், ஒன்று கிழக்கு நோக்கியும் உள்ளன. அவைகளில் இரண்டுக்குக் கோபுரமில்லை. வட்ட மதிலின் வாயிலுக்கு மட்டும் ஓர் சிறிய கோபுரமுண்டு. கொடிமரம் தெற்கில் அமைந்துள்ளது. கோயிலில் உள்ள கற்கொடுங்கைகள் மரவேலைபோல் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.



கோயிலின் முன் தோற்றம்

இவ்வூரைச் சுற்றிலும் நெல்வயலும், புல்வெளிகளுமாகிய நன்செய் புன்செய் நிலங்கள் நீர்ச் செழிப்புடன் விளங்கும். மலையிலிருந்து பார்த்தால் கண்ணுக்கெட்டிய வரையில் பச்சைப்பசேல்

என விளங்கும் பசும்பயிர்களின் காட்சி கண்ணுக்கு விருந்தளிக்கும். அங்கங்கே சிறு வாய்க்கால்கள் ஓடி நிலங்களை வளப்படுத்தும். உலகத்தார்க்கு அச்சாணியாகிய உழவர்கள் ஆங்காங்குள்ள வயல்களில் வேலைசெய்துகொண்டிருப்பார்கள்.

3. மூர்த்திகள்

இத்தலத்தில் உறையும் பெருமானுக்கு உச்சிநாதர், முத்தீசர், கற்பகநாதர் என்ற திருப்பெயர்களும், பழய கல்வெட்டுக்களால் உச்சீவநாதசுவாமி, உய்யக்கொண்டநாயனர், விழுமியார், ஆள்வார், விழுமியதேவர், விழுமியநாயனர் என்னும் திருநாமங்களும், அம்பிகைக்கு அஞ்சனட்சியம்மை என்னும் திருப்பெயரும் வழங்கப்படுகின்றன. சுவாமி சுயம்புமூர்த்தி; மலையின் உச்சியிலிருப்பதால் **உச்சிநாதர்** என்றும், முத்திகொடுப்பவராதலால் **முத்தீசர்** என்றும், கற்பகவிருட்சம் போன்று எண்ணிய பொருள்களைக் கொடுத்தலால் **கற்பகநாதர்** என்றும் மார்க்கண்டேயரை ஆட்கொண்டதால் **உச்சீவநாதர், உய்யக்கொண்டநாயனர்** என்றும், மிகவும் சிறந்தவராதலால் **விழுமியதேவர், விழுமியநாயனர்,** என்றும், உயிர்களை ஆட்கொள்ளும் காரணத்தால் **ஆள்வார்** என்றும், சுவாமிக்குத் திருநாமங்கள் அமைந்தன. மைதீட்டப்பெற்ற கண்களையுடையவராதலால் **அஞ்சனட்சியம்மை** யென்று தேவியார்

திருநாமம் வழங்கப்படுகிறது. இக்கோயிலில் இரண்டு அம்மன் சந்நிதிகள் உள. பழய அம்மன் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. இச் சந்நிதியில் உள்ள அம்பிகையின் இடத்திருக் கையில் உள்ள நீலோற்பல மலர்ச்சிலை பின்ன மாய் விட்டதால் பிற்காலத்தில் புதிய அம்மனைக் கிழக்கு நோக்கிப் பிரதிட்டை செய்துள்ளார்கள். பழய அம்மனை அப்புறப்படுத்த முயலும்போது கோயிலார் கனவில் அம்மன் தோன்றித் தன்னை அப்புறப்படுத்தாமல் அவ்விடத்திலேயே அமைக் கும்படி உணர்த்தியதாகவும் அவ்வாறே பழய அம்மனை முன்னிருந்தபடியே பிரதிஷ்டை செய்த தாகவும் சொல்லப்படுகின்றது. தற்போது இரண்டு அம்மனுக்கும் பூசைகள் நிகழ்ந்து வருகின்றன.


4. தீர்த்தங்கள்

இக்கோயிலுக்குரிய தீர்த்தங்கள் பொன்னொளி ஓடை, குடமுருட்டி, ஞானவாவி அல்லது முத்தி தீர்த்தம், எண்கோணக்கிணறு, நாற்கோணக் கிணறு என்பன.

இவைகளில் **பொன்னொளி ஓடை** என்பது கோயிலுக்குத் தெற்கே 3 பர்லாங் தொலைவி லுள்ளது. இயற்கை ஊற்றால் எப்போதும் தண் ணீர் நிறைந்து, தற்போது சிறிய வாய்க்காலைப் போன்றுள்ளது. இத்தீர்த்தம் பல நோய்களை நிவர்த்திப்பதாகச் சொல்லப்படுகிறது.

கோயிலுக்குக் கீழ்த்திசையில் 1 பர்லாங் தூலவில் குடமுருட்டி என்னும் நதி தென்வடலாக ஓடிக்கொண்டிருக்கிறது. இது தஞ்சை ஜில்லாவில் ஓடும் குடமுருட்டி அன்று, இது சர்ப்ப நதி என்றும், உய்யக்கொண்டான் என்றும் சொல்லப்படுகிறது. கல்வெட்டுக்களிலிருந்து இது வைரமேக வாய்க்கால் என்று வழங்கியதாகத் தெரியவருகிறது. இது காவிரியின் கால்வாய்களில் ஒன்ருகும்.

கோயிலுக்குத் தென்பாகத்தில் நான்காம் பிராகாரத்தில் ஞானவாவி, முத்திதீர்த்தம் என்னும் ஓர் சிறு பொய்கை உள்ளது. இதன் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் சண்முகப்பெருமான்



ஞானவாவி தீர்த்தம்

வீற்றிருக்கின்றார். தம்மை அர்ச்சித்து வழிபட்ட சண்முகப்பெருமானுக்கு இறைவன் ஆறுமுகத்தின் தத்துவங்களை உபதேசித்ததாக ஐதிகம். இம்மண்டபத்திலிருந்தே திருவிழாக் காலங்களில் சுவாமிகள் வாகனங்களில் புறப்படும்.

கோயிலின் மூன்றாம் பிராகாரத்தில் வடதிசையில் 8 கோணங்களாக உள்ள எண்கோணக் கிணறு ஒன்று உண்டு.

இதேபிராகாரத்தில் தென்கிழக்கில் நான்கு கோணமுள்ள நாற்கோணக் கிணறு ஒன்றும் உள்ளது. தற்போது இதிலிருந்தே அபிஷேகம் முதலியவைகளுக்கு நீர்எடுக்கப் படுகின்றது.

5. சுற்றுக் கோயில்கள்

இத்தலத்துக்கு வெளியே மேற்புறத்தில் சிற்சில கோயில்கள் உள்ளன. மேற்கே கரன் பூசித்ததாக உள்ள ஆளுடையார் கோயிலும் இரண்டாம் பிராகாரத்தில் வடகிழக்கில் இடர்தீர்த்தவர் கோயிலும், கோயிலுக்குத் தெற்கே முத்திதீர்த்தத்துக்குப் பக்கத்தில் வாகனமண்டபத்தில் முன் சொல்லிய சண்முகர் கோயிலும் உள்ளன.

இவ்வூரில் ஒருசமயம் வெள்ளம்வந்த காலத்தில் கோயிலுக்கு வெளியில் இருந்த பிடாரியைக் கிராமத்தார் எடுத்துவந்து கோயிலார் அனுமதி

யின் பேரில் கோயிலுக்குள் மூன்ரும் பிராகாரத்தில் மேல்பக்கத்தில் ஒருசிறு கோயில் கட்டிவைத்துக் கிராமப் பொதுவரும்படியிலிருந்து பூசாரியால் பூசை செய்யப்பட்டு வருகிறது. இப் பிடாரி விக்ரகம், கோயிலுக்குள் எப்போது வைக்கப்பட்ட தென்று தெரியவில்லை. அதை வெளிப்படுத்தி கிராமப் பொதுவிடத்தில் வைக்கச்செய்யும் உரிமை கோயிலார்க்குண்டு. அதன் பூசை, நைவேத்தியம் கோயிலுக்குச் சம்பந்தமில்லை. கோயிலைச்சேர்ந்த சுற்றுக்கோயிலும் இல்லை.

6. வழிபட்டோர்

திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், நாரதர், உபமன்யு முனிவர், மார்க்கண்டேயர், கரன், அருணகிரியார், ஈழ நாட்டரசன் முதலியோர் இத் தலத்தில் உள்ள பெருமானை வழிபட்டுள்ளார்கள்.

மார்க்கண்டேயர் வழிபட்டதற்கு அடையாள மாக அவருடைய சிலை நடராஜர் சந்நிதிக்கு எதிரில் உள்ள மண்டபத்தில் கல்விட்டத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. இயமபயம் இல்லாதிருக்கும் பொருட்டுக் தெற்கில் கொடிமரமும், அதன் பக்கத் தில் சிவபெருமானுடைய மழு முதலிய படைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குப் பிரார்த்தனைக் காரர்கள் பானக பூசை செய்துவருகின்றனர். மூல லிங்கத்தின் சிரசில் இரண்டு சிறிய குழிகள்

உள்ளன. இவைகள் மார்க்கண்டேயருக்கு அருள் செய்த காரணமாக ஏற்பட்டுள்ளனவென்று சொல்லப்படுகின்றது. 'வருங்காலன் உயிரை மடியத் திருமெல் விரலாற், பெரும் பாலன்றனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே' என்று சுந்தரமூர்த்திசுவாமிகளது இத்தலத் தேவாரத் திருவாக்கும் காண்க.

7. தலப்பெருமை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களில் வயல்கள் செறிந்த மருத நிலத்தின் மத்தியில் இத்தலம் அமைந்துள்ளது. இயற்கையமைப்பும் செயற்கையமைப்பும் பொருந்திய திருக்கோயில். இவ்வூரில் குழந்தைகளின் பாலாரிஷ்ட தோஷ நிவர்த்திக்காகச் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் குழந்தைகட்கு முடிகயிறு போடப்படுகிறது. இத்தலத்தில் வசிப்போருக்கு நீண்ட ஆயுளும், ஞானசித்தியும், நிறைசெல்வமும், சந்ததி விருத்தியும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

8. பூசைகள், திருவிழாக்கள்

இத்தலத்தில் உள்ள மூர்த்திகளுக்கு உச்சி, மாலை ஆகிய இரண்டு காலங்களிலும் காரண காமிக ஆகம விதிப்படிப் பூஜைகள் நடந்து வருகின்றன.

தை மாதத்தில் பூசத்தன்று ஸ்ரீ சந்திரசேகரரும் அம்மையாரும் சோமரசன்பேட்டைக்கு எழுந்தருளுவார்கள். அதுகாலை வயலூர் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளும் அவ்வூருக்கு எழுந்தருளுவர். அங்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

9. திருப்பணிகள்

மிகப் பழமையான இக்கோயிலில் பலவிடங்களில் பழுதேற்பட்டிருக்கிறது. முற்றிலும் திருப்பணி செய்யப் பெருந்தொகை வேண்டியிருக்கிறது. தற்போது கோயிலின் ஆதாயத்தைக்கொண்டு கோயில் முழுதும் தளவரிசைகள் போடப்பட்டுள்ளன. மடைப்பள்ளி புதுப்பிக்கப்பட்டு, உட்கோபுரமும், உள்மதிலின் தென்பாகமும் பழுது பார்க்கப்பட்டுள்ளன. இன்னும் சில திருப்பணிகள் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

10. சொத்துக்கள், வருமானம், திருவாபரணங்கள் முதலியன.

இக்கோயிலுக்குச் சுமார் 43 ஏக்கர் நன்செய் நிலங்களும், 12 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. இவைகளின் மூலமாய் ஆண்டுதோறும் ரூ. 1650 கிடைக்கிறது. சுமார் ரூ. 325 மதிப்புள்ள வெள்ளித் திருவாபரணங்கள் உள்ளன. பிரம்

மோற்சவத்தில் 10 நாட்களுக்கு வேண்டிய வாகனங்களும், ஓர்பெரிய இரதமும் உள்ளன.

11. நிர்வாகம்

தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூகா, திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த கோயில்களில் இதுவுமொன்று. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் நிர்வாகத்திலிருந்துவருகிறது. தற்போது 24-வது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் தம் நிர்வாகத்தில் உள்ள ஆலயங்களை நேரில் சென்று பார்வையிட்டு வருவதும், மகாநாடுகளைக் கூட்டுவித்துச் சமயத் தொண்டாற்றி வருவதும், மாதவெளியீடு இலவசவெளியீடுகள் பல வெளியிட்டு யாவர்க்கும் வழங்கி வருவதும் போற்றற்குரியனவாகும். இவ் ஆதீனத்தின் கிளையான மலைக்கோட்டை மௌன மடத்திலிருந்துகொண்டு சமயத் தொண்டு செய்துவரும் மௌன ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தற்போது இக்கோயில் கட்டளை விசாரணையாக இருந்து கோயில் காரியங்களைக் கவனித்து வருகின்றார்கள்.

12. புராண வரலாறுகள்

இத்தலத்திற்கு அச்சில் புராணமில்லை எனினும் சில வரலாறுகள் கர்ணபரம்பரையாகச்

சொல்லப்படுகின்றன. அவைகளின் சுருக்கம் இங்குத் தரப்படுகின்றன.

1. மார்க்கண்டேயர் அருள்பெற்றது.

சிவபெருமான் திருவருளால், சகல உயிர்களை யும் நீதிமுறைப்படி உஜ்ஜீவித்தும், தமது அரு ளுக்கே பாத்திரமாக்கிக்கொண்டும் திருவிளை யாடல்கள் புரிவதில் மிருகண்டுமுனிவர் என்பவர் முற்கலமுனிவரின் தவப்புதல்வியாகிய மருத்துவதி யென்னும் கன்னிகையை மணந்து நெடுங்காலம் புத்திரப்பேறின்மையால் காசித்தலத்தை யடைந்து மணிகர்ணிகையில் நீராடிச் சிவபெருமானை நோக்கிப் புத்திரப்பேற்றினை யவாவித் தவஞ் செய்தார். சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி "துர்க் குணம், அங்கஹீனம், இவற்றேடுகூடிய நூறு வயதுயிர்வாழும் புதல்வன் வேண்டுமா? அல்லது அழகு, அன்பு, நற்குண நற்செய்கை முதலிய வற்றைப் பெற்றுப் பதினறுவயது ஜீவித்திருக்கும் மைந்தன் வேண்டுமா?" எனக்கேட்க, முனிவன் "வயது குறைந்து வாழ்வானயினும் சற்புத்திர னையே விரும்புகிறேன்" என்று விண்ணப்பிக்க, அவ்வாறே வரமளித்துப் பெருமான் மறைய லாயினர். பிறகு சிறிது நாளில் முனிவர் மனைவி கருப்பமுற்று நல்ல சுப முகூர்த்தத்தில் ஓர் மைந் தனைப் பெற்றெடுத்தனள். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். தேவதுந்துபி முதலியன முழங் கின. பிரமன் அச்சிறுவனுக்கு மார்க்கண்டனென

நாமகரணம் செய்தனன். மார்க்கண் டேயர் வேதம், ஆகமம் முதலிய நூல்களில் தேர்ந்து சிவபெருமானே உண்மைப் பொரு ளென்றுணர்ந்து, சிவபக்தியுஞ் சிவனடியாரிடத் தன்பும் அதிகரித்தனர். அவ்வாறிருக்கையில் வயது பதினைந்தாகவே தாய்தந்தையர் இவரைப் பற்றிக் கவலைகொண்டனர். அதனையுணர்ந்த மார்க்கண்டேயர் தந்தையைக் கேட்டுத்தெரிந்து கொண்டு "எந்தையே யான் சிவபெருமானது பேரருளால் சிரஞ்சீவியாகின்றேன். அஞ்சவேண் டாம்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு, காசி முதல் தெற்கு நோக்கிஒவ்வொரு க்ஷேத்திரத் திற்குஞ்சென்று சிவபெருமானை வழிபட்டுக்கொண்டு வந்துகொண்டிருந்தனர். வரும் வழியில் இத் தலத்திற்கு வந்து பொன்னொளி நீரோடையில் ஸ்நானம் செய்து அநுஷ்டானங்களை முடித்துச் சிவபெருமானைப் பூசிக்க மாமலையை யடைந்தார். திருக்கற்குடி மாமலையைச்சுற்றிலும் சில முனிவர் கள் தவமியற்றி யிருத்தலைக்கண்டார். அவர்களெல் லாரும் சிவயோகத்தி லிருந்துகொண் டிருந்தார்கள். அவர்களை வணங்கிக்கொண்டே மாமலையின் மீதி லிருக்கும் மாதேவனை நோக்கிச்சென்றார். உபமன்யு முனிவரையும், நாரதமுனிவரையும் கண்டார். அவர் களிடம் அணுகி அன்புடன் அடிபணிந்து அநுக்கி ரஹம்பெற்று மூலப்பெருமானைநாடி, திரிகரண சுத்தியுடன் அருச்சித்து ஆராதித்து, கைகூப்பிச் சிவத்தியான நிலையை அடைந்தார். அதேசமயம்

கயிலைமலையில் சிவபெருமானை உமையவள் நோக்கி, "பெரும் பாலன்மார்க்கண்டேயன் உம்மை மெய் யாய் நம்பிப் பூசிக்கின்ருன். அவனுக்கு அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தனள். சிவபெரு மான் உமாதேவியுடன் திருக்கற்குடி மாமலையி லுள்ள லிங்கமூர்த்தியினின்றும் தோன்றி மார்க் கண்டேயரைப் பார்த்து, "மார்க்கண்டேயா! உன் மெய்யன்பையும், அருச்சனையையும் மெச்சினேம். யாதுவரம் வேண்டும்" என்ருர். மார்க்கண்டேயர் உமேசரைக்கண்டு ஆனந்தக்கண்ணீர் பெருக்கி "ஒருமையுடன் திருவடி நிழலில் ஆருயிரைச் சமர்ப் பித்தேன். தங்களது மீளா அடிமையைச் சிரஞ்சீவி யாய் ஆட்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித் தார். சிவபெருமான் "பெரும் பாலனே! உனக்கு உயிரும் அளித்தேன். சிரஞ்சீவியாகுக. இயமபயம் நீங்க உஜ்ஜீவித்தாட்கொள்வோம்" என்று அநுக் ரகம் செய்து மறைந்தார். இவ் வைபவத்தை நெடு நாளாய்க்காணத் தவம் செய்துகொண்டிருந்த ரிஷி களெல்லாம், நிஷ்டை நீங்கி பக்தியுடன் சிவபெரு மானைத் துதிசெய்து வணங்கினுர்கள். சிவபெருமான் முனிவர்களை நோக்கி உங்கள் கோரிக்கையாது? என்ருர். முனிவர்கள் "தேவாதிதேவா! எந்த நியம நெறிகளால் உலகம் விளங்குகின்றதோ அந்த விபரத்தை அடியேங்களுக்கு அனுக் கிரகிக்கவேண்டும்" என்ருர்கள். சிவபெருமான் தெற்கு முகமாய் எழுந்தருளியிருந்து விழுமிய நூலை விளக்கி, வியனுலகேழும் விளங்கும் விவரத்தை

எடுத்துக்கூறி மறைந்தருளினர். இவ்வைதிகத்தில் இன்னும் கொடிமரம் தென்புறத்திலும், திருப் பாதுகை கொடிமரத்தின் பக்கத்திலும் விளங்கு கின்றன.

2. கரன் வழிபட்டது.

விச்சிரவசுவுக்குச் சாகையிடத்துப் பிறந்த மூன்று புதல்வர்களுள் மூத்தவன் இவன். சகோ தரர் தூஷணன், திரிசிரன் என்போராவர். இவர் கள் இராவணனுடைய சகோதரர்கள். கரன் ஜன ஸ்தானத்தில் சேனதிபதியாயிருந்தவன். திரிசிரன் திருச்சியில் அரசாண்டபோது இவன் இத்தலத் திறைவனைப் பூசித்து வழிபட்டதோடல்லாமல் தனிக்கோயில் அமைத்தும் வழிபட்டான். இது ஆலயத்திற்கு மேல்புறம் ஆளுடையார் கோயில் எனவழங்கி வருகிறது.

3. ஈழநாட்டரசன் வழிபட்டது.

ஈழநாட்டரசன் ஒருவன் இத்தலத்துக்கு வந்து உச்சிக் காலத்தில் இறைவனை வழிபட்டுப் பலபேறு களைப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

4. சர்ப்ப நதி வரலாறு.

தஞ்சை மன்னன் ஒருவன் தன் நாட்டில் தண் ணீரில்லாமல் மக்கள் வருந்தவே தன் குல தெய்வத் தைப் பிரார்த்திக்க, அத்தெய்வம் கனவில்

தெரிவித்தபடி அரசன் திருச்சிக்கு மேற்கில் காவிரியிலிருந்து ஓர் கிளை நதியை வெட்டுவித்து அதிலிருந்து நீர்கொண்டு வரச்செய்தான். இந்நதி திருக்கற்குடியாகிய இத்தலத்தின் பக்கம் வந்ததும் நீர் மறைந்து போயிற்று. அரசன் இத்தலத்துப் பெருமானை பிரார்த்திக்க நதியில் மீண்டும் நீர் பெருகி ஓடிச் செல்லலாயிற்று. இந்நதி தஞ்சை ஜில்லா வரையில் சர்ப்பம்போல் வளைந்து வளைந்து சென்றதாகவும், நாளடைவில் பிற்பகுதி மறைந்து திருச்சி ஜில்லாவரையில் நின்று விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

13. சரித்திர வரலாறு

வலிமையான மதில்களைக்கொண்ட இக்கோயில் 18-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த கர்நாடகப் போரில் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் மைசூர்க்காரரும் மாறி மாறித் தங்கியிருத்தற்குரிய யுத்த அரணாக விளங்கியது. கி. பி. 1753ல் நிகழ்ந்த சண்டையில் இக்கோயிலில் ஓர் இடத்தில் சுரங்கம் அமைக்கப்பட்டு அதில் வெடிமருந்து வைத்து வெடிக்க முயல அது செவ்வையாய் வெடியாமற் போகவே மதில்கள் மட்டும் சிலவிடங்களில் சிதைந்து போயின. இவ்வாறாக இக்கோயில் ராணுவவீரர்கள் வந்து தங்குவதற்கும், பகைவர்கள் நெருக்கிய போது தப்பி வெளிச்செல்வதற்கும் இடமாக விளங்கியது. பிற்காலத்தில் அமைதி

ஏற்பட்டு பூசைகள் நிகழ்ந்து வரலாயின.
(Trichinopoly District Gazetteer)

14. கல் வெட்டுக்கள்

இக்கோயிலின் சுற்றுச் சுவர்களிலும், தூண் களிலும், தளவரிசையிலும், கோபுரவாயில்களிலும் கல்வெட்டுக்கள் உள்ளன. பல அரசாங்கத்தாரால் அவ்வப்போது நகல் எடுக்கப்பட்டுள்ளன.

ராஜகேசரி வர்மன் என்னும் முதலாம் ராஜ ராஜ சோழன், பரகேசரி வர்மன் என்னும் உத்தம சோழன், குலோத்துங்க சோழதேவன், பரகேசரி வர்மன் என்னும் ராஜேந்திர சோழ தேவன் பர கேசரி வர்மன் என்னும் பராந்தக சோழதேவன், விஜயநகரத்து அரசரான மல்லிகார்ஜுன மகா ராயர், கோனேரிமேக்கொண்டான் முதலிய அரசர் களின் காலத்தில் பல நிவந்தங்கள் கோயி லுக்குக் கிடைத்திருப்பதாகப் புலனுகின்றன.

1. சுவாமிகோயிலின் உட்பிரகாரத்தில் 5-வது தூணில், வீரபாண்டியனது தலையைக்கொண்ட பரகேசரி வர்மன் என்னும் இரண்டாம் ஆதித்த கரிகால சோழமன்னனுடைய பட்டத்தின் இரண் டாவது ஆண்டில், இருங்கொளக்கோன் என்னும் புகழ்விப்பிரகண்டன் - அவ்னிவல்லன் என்பவன் கோயிலில் நந்தா விளக்கு ஒன்று தினந்தோறும் சந்நிதியில் எரியவிடுதற்குத் தொண்ணூறு ஆடு

கள் தானம் செய்திருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

1 வீரபாண்டியனைத்தலைக்கொ
2 ண்டகொப்பரகேசரிபந்மற்க்கு
3 யாண்டு உ ஆவதுதெங்கரை
4 (பிரம்ம)தெயம்நந்திபந்மமங்கல
5 த்துதிருக்கற்குடி(பரமேஸ்வர)
6 ற்க்கு இருங்கொளக்கொஞ
7 நபுகழ்விப்பிரகண்டந்அவ
8 நிவல்லந் சந்திராதித்தவல்
9 எரியவைத்த திருநொந்தாவி
10 ளக்குஒன்றிநுக்குவைத்தசா
11 வாமூவாப்பேராடுதொண்
12 ணூறுதொண்ணூறுங்கொ
13 ண்டுசூலவுழக்கால்நிசதம்
14 உழக்குநெய்கொண்டுவிளக்
15 கெரிப்பொமா(ந்)ஞெம்தெவ
16 ர்கந்மிகளொ(ம்)இது(பந்மாஹெ
17 ஸ்வரரக்ஷை)

[பிறைக்கோட்டுக்குள்ளவை கிரந்த எழுத்துக்கள்.]

Translation

In the 2nd year of the reign of king Parakesarivarman who took the head of Veerapandia, Irungolakkon alias Pugalvipragandan Avanivallan gave ninety sheep which neither die nor grow old for burning one perpetual lamp, as

long as the moon and the sun last, to the God Paramesvara (Siva) of Tirukkarkudi in Nandivarmamangalam a Brahmadeya on the southern bank of the Kaveri river.

We the servants of the God (devarkanri) have received these ninety sheep and have agreed to burn the lamp with one ulakku of ghee everyday, measured by the ullakku marked with the trident. This gift is placed under the protection of all Maheswaras.

(L. I. D. Vol. III Part III.)

2. உய்யக்கொண்டான் கால்வாய் பிரிகின்ற தலைப்பில் இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று 800 ஆண்டுகட்கு முன்பு சோழநாட்டை ஆண்ட குலோத்துங்க மன்னனால் இக்கால்வாய் செப்பனிடப்பட்ட விவரம் தெரிவிக்கிறது.

3. திருக்கற்குடிக் கோயிலின் தெற்கு, கிழக்குத் திருமதில்களில் திருக்கற்குடி நாதருக்குப் பராந்தகன் மாதேவடிகள் என்னும் செம்பியன் மாதேவியால் நிலதானம் செய்யப்பட்டுள்ள விபரம் பொறிக்கப்பட்டுள்ளது. அவை பல்லவ அரசனும் 3-ம் நந்திவர்மன் என்பவனுமான வீரமேகனாலே வெட்டப்பட்ட வீரமேக வாய்க்காலின் தென்கரையில் உள்ள நந்திவர்ம மங்கலம் என்னும் ஊரிலும்

அதனையடுத்தும் உள்ள பல நிலங்களைக் குறிப்பனவாகும்.

4. பரகேசரிவர்மன் என்னும் முதலாம் இராஜேந்திரசோழதேவன் (1011—53) காலத்தில் சுவாமிசந்நிதியில் தினந்தோறும் விளக்கிடுவதற்காகத் தொண்ணூற்றாறு ஆடுகள் தானம் செய்யப்பட்டிருப்பதாகக் கிழக்குச் சுவரில் குறிக்கப்பட்டுள்ளது.

உ

சிவமயம்

திருமுறைகள்

பண்-தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனன் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. 1

அங்கமொ ராறுடை வேள்வி யான வருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல் பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர் தங்கையின் மைந்தர்க டாவிக்
கங்குலின் மாமதி பற்றுங் கற்குடி மாமலை யாரே. 2

நீரக லந்தரு சென்னி நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த தண்மதி சூடிய சைவர்
போரக லந்தரு வேடர் புனத்திடை யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங் கற்குடி மாமலை யாரே. 3

ஒருங்களி நீயிறை வாவென் றும்பர்க ளோல மிடக்கண்
டிருங்கள மார விடத்தை யின்னமு துண்ணிய வீசர்
மருங்களி யார்பிடி வாயில் வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்குங் கற்குடி மாமலை யாரே. 4

போர்மலி திண்சிலை கொண்டு பூதக ணம்புடை சூழப்
பார்மலி வேடுரு வாகிப் பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல் கிளைத்த வின்னொளி மாமணி யெங்கும்
கார்மலி வேடர் குவிக்குங் கற்குடி மாமலை யாரே. 5

உலந்தவ ரென்ப தணிந்தே யூரிடு பிச்சைய ராகி
விலங்கல்வில் வெங்கன லாலே மூவெயில் வேவ முனிந்தார்
நலந்தரு சிந்தைய ராகி நாமலி மாலையி னாலே
கலந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. 6

மானிட மார்தரு கையர் மாமழு வாரும் வலத்தார்
ஊனிடை யார்தலை யோட்டி லுண்கல னாக வுகந்தார்
தேனிடை யார்தரு சந்தின் றிண்சிறை யாற்றினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங் கற்குடி மாமலை யாரே. 7

வாளமர் வீர நினைந்த விராவணன் மாமலை யின்கீழ்த்
தோளமர் வன்றலை குன்றத் தொல்விர லூன்று துணைவர்
தாளமர் வேய்தலை பற்றித் தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளம தார்முகில் கீறுங் கற்குடி மாமலை யாரே. 8

தண்டமர் தாமரை யானுந் தாவியிம் மண்ணை யளந்து
கொண்டவ னும்மறி வொண்ணாக் கொள்கையர் வெள்விடை யூர்வர்
வண்டிசை யாயின பாட நீடிய வார்பொழி னீழல்
கண்டமர் மாமயி லாடுங் கற்குடி மாமலை யாரே. 9

மூத்துவ ராடையி னாரு மூசு கடுப்பொடி யாரும்
நாத்துவர் பொய்ம்மொழி யார்க ணயமில ராமதி வைத்தார்
ஏத்துயர் பத்தர்கள் சித்த ரிறைஞ்ச வவரிட ரெல்லாம்
காத்தவர் காமரு சோலைக் கற்குடி மாமலை யாரே. 10

காமரு வார்பொழில் சூழுங் கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாடவல் லார்கள்
பூமலி வானவ ரோடும் பொன்னுல கிற்பொலி வாரே. 11

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மூத்தவனை வானவர்க்கும் மூவா மேனி
 முதலவனைத் திருவரையின் மூர்க்கப் பாம்பொன்
றார்த்தவனை யக்கரவ மார மாக
 வணிந்தவனைப் பணிந்தடியா ரடைந்த வன்போ
டேத்தவனை யிறுவரையிற் றேனை யேனோர்க்
 கின்னமுத மளித்தவனை யிடரை யெல்லாம்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
 கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 1

செய்யானை வெளியானைக் கரியான் றன்னைத்
 திசைமுகனைத் திசையெட்டுஞ் செறிந்தான் றன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
 யணியானைச் சேயானை யானஞ் சாடும்
மெய்யானைப் பொய்யாது மில்லான் றன்னை
 விடையானைச் சடையானை வெறித்த மான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
 கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 2

மண்ணதனி லைந்தை மாநீரி னான்கை
 வயங்கெரியின் மூன்றை மாருதத் திரண்டை
விண்ணதனி லொன்றை விரி கதிரைத்
 தண்மதியைத் தாரகைக டம்மின் மிக்க
எண்ணதனி லெழுத்தையே ழிசையைக் காம
 னெழிலழிய வெரியுமிழ்ந்த விமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
 கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 3

நற்றவனைப் புற்றரவ நாணி ஞானை
நாணாது நகுதலையூ ணயந்தான் றன்னை
முற்றவனை மூவாத மேனி யானை
முந்நீரி னஞ்சமுகந் துண்டான் றன்னைப்
பற்றவனைப் பற்றார்தம் பதிகள் செற்ற
படையானை யடைவார்தம் பாவம் போக்கக்
கற்றவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 4

சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன் றன்னைச்
சங்கரனைத் தழலுறுதாண் மழுவா டாங்கும்
அங்கையனை யங்கமணி யாகத் தானை
யாகத்தோர் பாகத்தே யமர வைத்த
மங்கையனை மதியொடுமா சுணமுந் தம்மின்
மருவவிரி சடைமுடிமேல் வைத்த வானீர்க்
கங்கையனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 5

பெண்ணவனை யாணவனைப் பேடா னானைப்
பிறப்பிலியை யிறப்பிலியைப் பேரா வாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலா னானை
வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனா னானைப்
பாரவனைப் பாரில்வா ழுயிர்கட் கெல்லாம்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 6

பண்டானைப் பரந்தானைக் குவிந்தான் றன்னைப்
பாரானை விண்ணாயிவ் வுலக மெல்லாம்
உண்டானை யுமிழ்ந்தானை யுடையான் றன்னை
யொருவருந்தன் பெருமைதனை யறிய வொண்ணா
விண்டானை விண்டார்தம் புரங்கள் மூன்றும்
வெவ்வழலில் வெந்துபொடி யாகி வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 7

வானவனை வானவர்க்கு மேலா னானை
வணங்குமடி யார்மனத்துண் மருவிப் புக்க
தேனவனைத் தேவர்தொழு கழலான் றன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லைவிடை யேற்றி னானைக்
குழன்முழவ மியம்பக்கூத் தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 8

கொலையானை யுரிபோர்த்த கொள்கை யானைக்
கோளரியைக் கூரம்பா வரைமேற் கோத்த
சிலையானைச் செம்மைதரு பொருளான் றன்னைத்
திரிபுரத்தோர் மூவர்க்குச் செம்மை செய்த
தலையானைத் தத்துவங்க ளானான் றன்னைத்
தையலோர் பங்கினனைத் தன்கை யேந்து
கலையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 9

பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ரானைப்
புறம்பயனை யறம்புரிந்த புகலூ ரானை
எழிலானை யிடைமருதி னிடங்கொண் டானை
யீங்கோய்நீங் காதுறையு மிறைவன் றன்னை
அழலாடு மேனியனை யன்று சென்றக்
குன்றெடுத்த வரக்கன்றோ ளெரிய வூன்றும்
கழலானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. 10

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள்

பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விடையா ருங்கொடியாய் வெறியார்மலர்க் கொன்றையினாய்
படையார் வெண்மழுவா பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அடிகே ளெம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே. 1

மறையோர் வானவருந் தொழுதேத்தி வணங்கநின்ற
இறைவா எம்பெருமா னெனக்கின்னமு தாயவனே
கறையார் சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அறவா அங்கணனே யடியேனையு மஞ்சலென்னே. 2

சிலையால் முப்புரங்கள் பொடியாகிச் சிதைத்தவனே
மலைமேல் மாமருந்தே மடமாதிடங் கொண்டவனே
கலைசேர் கையினனே திருக்கற்குடி மன்னிநின்ற
அலைசேர் செஞ்சடையா யடியேனையு மஞ்சலென்னே. 3

செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மதயானை யுரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னிநின்ற
ஐயா எம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே. 4

சந்தார் வெண்குழையாய் சரிகோவண ஆடையனே
பந்தா ரும்விரலா ளொருபாக மமர்ந்தவனே
கந்தார் சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
எந்தா யெம்பெருமா னடியேனையு மேன்றுகொள்ளே. 5

அரையார் கீளொடுகோ வணமு மரைக்கசைத்து
விரையார் கொன்றையுடன் விளங்கும்பிறை மேலுடையாய்
கரையா ரும்வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அரையா எம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே. 6

பாரோர் விண்ணவரும் பரவிப்பணிந் தேத்தநின்ற
சீரார் மேனியனே திகழ்நீல மிடற்றினனே
காரார் பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
ஆரா இன்னமுதே யடியேனையு மஞ்சலென்னே. 7

நிலனே நீர்வளிதீ நெடுவானக மாகிநின்ற
புலனே புண்டரிகத் தயன்மாலவன் போற்றிசெய்யும்
கனலே கற்பகமே திருக்கற்குடி மன்னிநின்ற
அனல்சேர் கையினனே யடியேனையு மஞ்சலென்னே. 8

வருங்கா லன்னுயிரை மடியத்திரு மெல்விரலால்
பெரும்பா லன்றனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே
கரும்பா ரும்வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
விரும்பா வெம்பெருமா னடியேனையும் வேண்டுதியே. 9

அலையார் தண்புனல்சூழ்ந் தழகாகி விழவமரும்
கலையார் மாதவர்சேர் திருக்கற்குடிக் கற்பகத்தைச்
சிலையார் வாணுதலாள் நல்லசிங்கடி யப்பனுரை 10
விலையார் மாலைவல்லார் வியன்மூவுல காள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

திருப்புகழ்

குடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக் கைசாலக்
குவட்டைச் செறுத்துக்

குலத்தைக் குமைத்துப் பகட்டிச் செருக்கிக் தவர்சோரப்
குருத்தத் துவத்துத்

புடைத்துப் பணைத்துப் பெருக்கக் கதித்துப் தனமாதர்
புறப்பட் டகச்சுத்

புணர்ச்சிச் சமுத்ரத் திளைப்பற் றிருக்கப் தருவாயே
பறித்துப் பதத்தைத்

கடத்துப் புனத்துக் குறத்திக் குமெத்தக் பரிவாகக்
கருத்திச் சையுற்றுப்

கனக்கப் ப்ரியப்பட் டகப்பட் டுமைக்கட் குரியோனே
கடைப்பட் டுகிற்கைக்

தடத்துற் பவித்துச் சுவர்க்கத் தலத்தைத் தனிவேலா
தழைப்பித் தகோற்றத்

தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச்செய்ப் பதிக்குத்
தருக்கற் குடிக்குப் பெருமாளே.

நெறித்துப் பொருப்புக் கொத்த
முலைக்குத் தனத்தைக் கொட்டி
நிறைத்துச் சுகித்துச் சிக்கி வெகுநாளாய்

நினைத்துக் கொடத்துக் கத்தை
அவத்தைக் கடுக்கைப் பெற்று
நிசத்திற் சுழுத்திப் பட்ட அடியேனை

இறுக்கிப் பிடித்துக் கட்டி
உதைத்துத் துடிக்கப் பற்றி
இழுத்துத் துவைத்துச் சுற்றி யமதூதர்

எனக்குக் கணக்குக் கட்டு
விரித்துத் தொகைக்குட் பட்ட
இலக்கப் படிக்குத் தக்க படியேதான்

முறுக்கித் திருப்பிச் சுட்டு
மலத்திற் புகட்டித் திட்டி
முழுக்கக் கலக்கப் பட்டு அலையாமல்

மொழிக்குத் தாத்துக் குற்ற
தமிழ்க்குச் சரித்துச் சித்தி
முகத்திற் களிப்புப் பெற்று மயிலேறி

உறுக்கிச் சினத்துச் சத்தி
அயிற்குத் தாத்தைக் கைக்குள்
உதிக்கப் பணித்துப் பக்கல் வருவாயே

உனைச்சொற் றுதிக்கத் தக்க
கருத்தைக் கொடுத்துச் சித்தி
உடைக்கற் குடிக்குட் பத்தர் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

கற்குடிமாமலைமாலை

செயிரறு நினது திருவருள் காட்டுந்
திறத்தினாற் காண்பதை யன்றிப்
பயிறரு கல்வி கேள்வியா னின்னைப்
பரிகறக் காணவும் படுமோ
வயிரமா மலைச்செம் மணிக்குவால் பச்சை
மணிக்குவா லொடுபிறங் கிடுதல்
கயிலைநீ யுமையோ டிருப்பது தெரிக்குங்
கற்குடி மாமலைப் பரனே.

மானிடப் பிறவி வந்தது மனத்தால்
வாக்கினாற் காயத்தாற் பணிசெய்
தானிடத் தைந்து மாடுநின் னடிக்கீ
ழமரவென் றறிந்திலன் சிறியேன்
கூனுடைக் குலைய குறுங்கழித் தரம்பைக்
கொழுங்கனி யிழிந்ததேன் கருப்பங்
கானிடைப் பாயும் படுகர்சூழ் தெய்வக்
கற்குடி மாமலைப் பரனே.

—மீனாட்சிசுந்தரம்பிள்ளை

தனிப் பாடல்

எத்தி யலவன் இடங்கெடுத்த ஆராலைக்
கொத்தி முகங்கெடுத்த கூன்கொக்குச்—சுத்த
இழையேற்றம் போன்றொளிரும் கற்குடியே கங்கை
உழையேற்ற செஞ்சடையா னூர்.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.